அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

எல்லாம் செயல் கூடும்

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

# தீப நெறி

தீபம் 10 நெறி 01 தமிழ் மாத இதழ் விலை ₹ 1 ஆகஸ்ட் 2019

**பட்டினியில்லா...**
**நோயில்லா...**
**குற்றமில்லா...**

**வளமிக்க**
**வையகத்தை**
**வார்த்தெடுப்போம்!**



**12 வது**
**ஆண்டு விழா**
**நாள்**
**08.09.19**

**இடம் :**
**வேளச்சேரி**
**சென்னை**

## உள்ளொளி ஓங்கிட உயிரொளி விளங்கிட
## வெள்ளொளி காட்டிய மெய்யருட்கனலே

## எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!
## வள்ளல் மலரடி வாழ்க!! வாழ்க!!!



தருமமும்...

## வாழ்த்தி மகிழ்கிறோம்

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் தயவாளரும், சிறந்த சொற்பொழிவாளருமான **தயவுமிகு மு. பாபு** தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் **ஸ்ரீமதி பாத்திமா பாபு** ஆகிய சன்மார்க்க தம்பதியினரை தீபம் வாயாரா வாழ்த்தி மகிழ்கிறது.

## வாயார வாழ்த்துகிறோம்

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் ஆன்மநேய அறப்பணியில் தன்னை ஈடுபடுத்தி தொண்டாற்றும் தயவுமிகு **பரணீதரன்** அவர்களின் சேவையை வாயார வாழ்த்துகிறோம்.




தொண்டும்...

## " தீபநெறி " ஆசிரியர் குழு




**கே.என். உமாபதி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கே.கே. நகர், சென்னை.
கைபேசி : 95518 49757



**செ. கதிர்வேல்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
ஈரோடு.
கைபேசி : 98659 39896



**பொதிகைபிரியன்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கள்ளக்குறிச்சி
கைபேசி : 97897 88198



**அர. இலட்சுமணசாமி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
இராணிப்பேட்டை.
கைபேசி : 80564 38488



**மு. பாலகிருஷ்ணன்**
தணிக்கை & வெளியீட்டாளர்
தீபநெறி மாத இதழ்.
கைபேசி : 94440 73635



**ஜோதி சதுரகிரியார்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
வேளச்சேரி, சென்னை.
கைபேசி : 97894 94009



தருமம்

# தீபநெறி தொண்டர்களின் தினசரி தியானம்

ஆக்கம்
திரு. கே.என். உமாபதி அவர்கள்,
கே.கே. நகர்



தவம்



1. **அ**றியாமை அடியோடு அகலட்டும்!

2. **ஆ**ன்ம நேயம் ஆல்போல் தழைக்கட்டும்!

3. **இ**ல்லாமை இல்லாமல் புதையட்டும்!

4. **ஈ**வது இயல்பாய் இருக்கட்டும்!

5. **உ**யிரிரக்கம் எங்கும் தழைக்கட்டும் !

6. **ஊ**க்கமுற்று யாக்கைகள் ஒளிரட்டும்!

7. **எ**ல்லா உயிர்களும் இன்புற்று வாழட்டும்!

8. **ஏ**ற்றத்தாழ்வு இடருற்றுப் போகட்டும்!

9. **ஐ**ம்பூதங்கள் மாசுபடுவதைத் தடுக்கட்டும்!

10. **ஒ**ன்றே இறையென உணர்த்தட்டும்!

11. **ஓ**யாமல் வையகத்தில் அருட்பா ஒலிக்கட்டும்!

12. **ஔ**டதமாம் அருட்பெருஞ்ஜோதி அற்புதங்கள் நடத்தட்டும்!

**தருமம் செய்வோம்! தயவுடன் வாழ்வோம்!!**

நித்ய தீப தருமச்சாலை எண்.7/8 புத்தேரிக்கரை தெரு,
தண்டீஸ்வரம் கோவில் அருகில், வேளச்சேரி, சென்னை– 600 042.

**பூரண வடிவாய்ப் பொங்கிமேல் ததும்பி
ஆரண முடியுடன் ஆகம முடியும் (1272)**

# தயவுவெளி

"....ஜீவகாருண்யத்தின் முக்கிய இலட்சியமாவது என்னவெனில் எந்த வகையாலும் ஆதாரமில்லாத ஏழைகட்கு உண்டாகின்ற பசி என்கிற பெரிய ஆபத்தை நிவர்த்தி செய்வதே முக்கிய இலட்சியம் என்று அறியவேண்டும்..."

– உரைநடைப் பகுதி, பக்கம்-540.

"...ஆகாரம் உண்டு பசி நீங்கிய தருணத்தில் தத்துவங்களெல்லாம் தழைத்து கடவுள் விளக்கமும் ஆன்ம விளக்கமும் அகத்திலும் முகத்திலும் வெளிப்பட்டு திருப்தி இன்பம் உண்டாகின்றது. ஆதலின் நாமனைவரும் எந்தவகையிலும் ஆதாரமில்லாத ஏழைகட்கு பசி நேரிட்டபோது மிகவும் கருணை உள்ளவர்களாகி நம்மால் கூடியமட்டும் அந்தப் பசி என்கின்ற ஆபத்தை பொதுவாக நிவர்த்திப்பதற்கு முயற்சி செய்வதே ஆன்மலாபம் என்று அறியவேண்டும்...."

– இது 23.5.1867 அன்று வெளியிடப்பட்ட ஜீவகாருண்ய ஒழுக்க விளம்பரம்.

கோயில் என்றாலே அது சிதம்பரம் என்பர். அது 40 காணி நிலத்தில் அமைந்ததாக சொல்கின்றனர். இந்தக் கோயிலைவிடப் பெரியது உள்ளதா எனில் "உள்ளம் பெருங்கோயில்" என்பார் திருமூலர். தஞ்சைப் பெரியகோயில் என்பதும் இருக்கிறது. ஆனால் ஐம்பூதங்களில் ஒன்றான "வெளி" என்பதன் தத்துவமே சிதம்பரம் கோயில் என்பதும் அங்கே அந்த "வெளி" என்பதை காட்டுவதையே "சிதம்பர ரகசியம்" என்பதும் வழக்கில் உள்ளது. இராமலிங்கப் பெருமானார் இந்த வெளியின் ரகசியம் அறிய சிதம்பரம் சென்று தங்கினார். ஆனால் சில காரணங்களால் அதைவிட்டு நீங்கி, இன்று வடலூர், பார்வதிபுரம் என்றெல்லாம் அழைக்கப்படும் ஊருக்கு வந்து 80 காணிக்கு மேலாக நிலத்தை ஊர் மக்களிடம் இனாமாகப் பெற்று, அதை "வடலூர் பெருவெளி" என்று அழைத்து உத்தரஞான சித்திபுரம். உத்தரஞானசிதம்பரம் போன்றவற்றையும் அங்கே காட்டியிருக்கிறார்.

வடலூர் என்பதை பல நாடுகட்கிடையேயுள்ள பாரத நாட்டின் தென்பாலுள்ள ஒரு ஊர் என்பதாகக் கொள்வதைவிட உலகமே வடலூராக மாறவேண்டும் என பிரார்த்தனை செய்ய முனையலாம். வடலூர் என்பதற்கு பல விளக்கங்கள் தரப்படுகின்றன. அதனுடன் இப்படி ஒரு விளக்கத்தையும் தெரிந்து கொள்ளலாமே.

| | | |
|---|---|---|
| வடு என்றால் | - | குற்றம் |
| அல் என்றால் | - | அல்லாத (ஒரு நிலையை) |
| ஊர் என்றால் | - | பரவுதல்(அ) பரப்புதல் |
| வடலூர் | - | குற்றம் இல்லாத ஒரு நிலையை பரவச் செய்தல்! |

குற்றம் என்பது முதற்பத்தியில் வள்ளலார் சொன்ன – எந்த ஆதாரமும் இல்லாத ஏழைகளின் பசியை நிவர்த்தி – செய்யாமல் பார்த்துக் கொண்டிருத்தல்! பசித்தவரைப் பாராத நிலை வடலூரின் பெருவெளியில் இல்லை. இது பெருவெளி ரகசியம். வடலூரின் இந்த ரகசியம் பார் முழுதும் பரவி உலகின் எந்தப் பகுதியிலும் பசி என்பதே இல்லாமல் செய்வதே பார் – உலகம் (மக்கள்). வதி – வசிக்கும். புரம் – ஊர்! அதாவது, பார்வதிபுரம் = உலகமுழுவதுமுள்ள மக்கள் பசியின்றி வசிக்க வேண்டுமென்பதே இதன் வெளிப்பாடு.

எனவே அந்தப் பெருவெளியென்பதில் சோறு போட்டால் மட்டும் போதுமா என்ற வினாவிற்கு விடையிதுவே! உலகெங்கும் தருமச்சாலைகள் இயங்குவது உங்கட்குத் தெரியும். அதில் ஒன்றுதான் கடந்த 12 ஆண்டுகளாக வேளச்சேரியில் பணிசெய்யும் தீபம் அறக்கட்டளை – அது பசி தவிர்த்தல் மாத்திரம் புரிவதுடன் நிற்கவில்லை. காரணம் – வடலூர்ப் பெருவெளியில் தருமச் சாலை தொடங்கிய சில நாட்களில் "அதைச் சார்ந்த பல கிளைச்சாலைகளாம் வைத்தியசாலை, சாஸ்திரசாலை, உபகாரச்சாலை, யோகசாலை, விவகாரசாலை, விருத்திசாலை, உபாசனாசாலை, இவைகளையும் தொடங்குவது குறித்து சமரசவேத சன்மார்க்க சங்கத்தவர்கள் ஏற்படுத்திக் கொண்ட கையொப்ப ஏற்பாடு" என்பது உரைநடைப்பகுதி

**கடந்தென தறிவாம் கனமேற் சபைநடு**
**நடந்திகழ் கின்ற மெய்ஞ்ஞான ஆரமுதே (1274)**

பக்கம் 542ல் "கிளைச்சாலைகள் 1867" என்ற தலைப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதற்கிணங்க உங்கள் தீபம் அறக்கட்டளையினர் தீபநெறி மாத இதழ் வெளியிடுதல், பசி தவிர்த்தல், மருத்துவ உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, பேரிடர்காலங்களில் அந்தந்த இடத்திற்குச் சென்று உணவு, உடை, பண்டம், பாத்திரம் போன்றவற்றை பணிவுடன் அளித்தல், யோகா வகுப்புகள், மாதாந்திர சன்மார்க்க பெருந்தகைகளைக் கொண்டு சொற்பொழிவு நிகழ்த்துதல் ஆகியனவும் தடையின்றி நீங்கள் நடத்தி வருகின்றீர்கள்.

நமது தீபம் அறக்கட்டளையினர் இத்தனை நாட்களாக அடுக்கு, அண்டா, கரண்டிகள் சகிதம் வேளச்சேரி கல்குட்டை மற்றும் ஆங்காங்கே உள்ள கோயில் வாசலுக்கு வெளியேயும் மரங்களின் அடியிலும், சாலை ஓரங்களிலும் பசி தவிர்த்தலைத் தொடங்கி – இரு சக்கரவாகனம், மூன்று சக்கர தள்ளுவண்டி, நான்கு சக்கர மோட்டார் வண்டி என ஒவ்வொரு சக்கரமாக வண்டிகளை மேம்படுத்தியதுடன் தொண்டர்களும், உறுப்பினர்களும், அறங்காவலர்களும், நிறுவனரும் சக்கரங்களாய் உருண்டும், புரண்டும், உடைந்தும், தேய்ந்தும் குத்தகை இடத்தில் இயங்கி வந்த நித்திய தருமச்சாலை பசி என்னும் கொடிய நோயை விரட்ட – வள்ளலாரின் கொடியை உயர்த்திப் பிடித்து நெஞ்சு உரத்துடன் பணிந்து நின்றதால் "நானே சன்மார்க்கம் நடத்துகிறேன்" எனக் கூறிய வள்ளலார் கடந்த 08.07.2019 அன்று வேளச்சேரியில் 3500சதுர அடி பரப்பளவில் தீபம் அறக்கட்டளைக்கு சொந்தமான நிலம் வாங்க அருள்புரிந்தார். இப்பணியை இன்னும் உயர்த்து என்று வள்ளலார் இட்ட கட்டளைதானே இந்த தயவுச் செயல்?

சிதம்"பரவெளி"யில் கனகசபையில் ஒரு திரை நீக்கி கோயில் கூரையில் உள்ள துவாரத்தின் வழியாக "ஆகாயவெளி" காட்டப்படுகிறது.

வடலூர் "பெருவெளி"யில் அமைந்த ஞானசபையில் எட்டு திக்குகளிலும் வாயிற்படியமைத்து தைப்பூச தினத்தன்று காலை ஆறு மணிக்கு ஏழு திரை நீக்கும்போது கிழக்கில் சூரியனையும், மேற்கில் சந்திரனையும், தெற்கு நோக்கி அக்னியையும், வடக்கு நோக்கி நிற்கும் நாம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனை அகத்தில் காணவும் இங்கு வழி சொல்லப்பட்டிருக்கிறது. ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் ஒருங்கே இதைக் காணலாம்.


முச்சுடர்களும் ஒளி முயங்குற அளித்தருள்
அச்சுடராம் சபை அருட்பெருஞ்ஜோதி
(அகவல் 63 - 64)

என்பது மேற்சொன்ன சூரிய, சந்திர, அக்னியை முயங்குற (ஒன்று சேர்க்கும்) அருட்பெருஞ்ஜோதி என்னும் அச்சுடரே காரணமாகும் என்பதே ஞானசபையில் நாம் அறிவது. ஆன்மிகத்தின் உயர்நிலை தொட்டவர்க்கு சிதம்பர ரகசியம் எளிதில் விளங்கும். ஆனால்,

உலகுயிர்த்திரள் எலாம் ஒளிநெறி பெற்றிட இலகும்
ஐந்தொழிலையும் யாம் செயத்தந்தனை
(அகவல் 1577/78)

என்பதற்காகவும் தோற்றுவிக்கப்பட்ட சன்மார்க்கம் சாதாரண நிலையில் உள்ளவர்களையும் இந்த தயவுவெளியாம் பெருவெளி நிறைவேற்றும்!

சிதம்பரம் இராமலிங்கம் என்றுதானே நமது பெருமானார் கைச்சாற்றிட்டார். அந்தப் பரவெளியை பெருவெளியில் காட்டியும், வெளிக்குள் வெளிகடக்கும் சூட்சுமத்தை சொன்னவரும் நம்மிடையே வருவிக்கவுற்ற அக்டோபர் ஐந்து – "ஆன்மநேய ஒருமைப்பாட்டு தினம் முதற்கொண்டு தருமமிகு சென்னையில் அந்த தடையறியா தெய்வம் அமர்ந்து ஆட்சி செய்ய தேர்வு செய்திருக்கும் இடம்தான் இந்த வியத்தகு வேளச்சேரி தயவுவெளி!"



**K.N. உமாபதி**
K.K. நகர், சென்னை
95518 49757

**சத்திய அமுதே தனித்திரு அமுதே**
**நித்திய அமுதே நிறைசிவ அமுதே (1276)**

# அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் வந்த திருநாள்!

எல்லாம் வல்ல தனித்தலைமைப் பெரும்பதியாகிய உண்மைக் கடவுள் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தன்னை கலந்து இன்புறும் நாளை முன் கூட்டியே மக்களுக்கு தெரிவிக்கின்றார் வள்ளலார். இறைவனால் வருவிக்க உற்ற வள்ளல் பெருமான் 51 ஆண்டுகளாக இவ்வுலகில் வாழ்ந்து உலக மக்களுக்கு சொல்ல வேண்டிய ஒழுக்க நெறிகளை இறைவன் கட்டளைப்படி ஆணைப்படி முழுமையாக முறையாக, எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் வெளிப்படுத்தி உள்ளார்.

வெளிப்படுத்தியதும் மட்டும் அல்லாமல் தான் வாழ்ந்தும் காட்டியவர் வள்ளலார். மனிதன் இறைவன் நிலைக்கு தன்னை மாற்றிக் கொண்டால் மட்டுமே இறைவன் தானே வந்து ஆட்கொள்வார் என்பதுதான் வள்ளலார் கண்ட சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க தனிப்பெரும் நெறியாகும்.

இந்த நெறியின் நோக்கம் இறைவன் அருளைப் பெற்று பேரின்ப சித்திப் பெருவாழ்வு வாழ்வதாகும். வள்ளலார், இந்த உலகத்தில் பஞ்சபூத உடம்பை எடுத்து வாழ்ந்து இறைவன் தொடர்பு கொண்டு பூரண அருளைப் பெற்று பூத உடம்பை ஒளி உடம்பாக (அருள்உடம்பு) மாற்றிக் கொண்டு வாழ்ந்து மரணத்தை வென்றுவிடுகின்றார். வள்ளலார் மரணத்தை வென்று அருள் உடம்பு பெற்றுக் கொண்டதால் இறைவன் வரும் நேரத்தை உலக மக்களுக்கு அறிவிக்கின்றார்.

வள்ளலார் அனுபவமாலை பதிகத்தில் பதிவு செய்கின்றார்!

அருளாளர் வருகின்ற தருணம் இது தோழி
ஆயிரம் ஆயிரங்கோடி அணிவிளக்கு ஏற்றிடுக
தெருளாய பசுநெய்யே விடுக மற்றை நெய்யேல்
திருமேனிக் கொருமாசு செய்தாலும் செய்யும்
இருள்ஏது காலைவிளக் கேற்றிட வேண்டுவதோ
என்னாதே மங்கலமாய் ஏற்றுதலாங் கண்டாய்
மருளேல் அங்கவர் மேனி விளக்கமது எண்கடந்த
மதி கதிர் செங்கனல் விரவி யென்னினுஞ்சா லாதே!

என்னும் பாடலில் அருளாளர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தன்மையும் அவர் வருகின்ற செய்தியும் முன் கூட்டியே வெளிப்படுத்துகின்றார்.

அனுபவமான பாடல்கள் 100 பாடல்களும் இறைவனும் வள்ளலாரும் உரையாடிய அனுபவப் பாடல்களாகும். இறுதியாக மகா பேருபதேசம் என்னும் பகுதியில் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை எப்படி பெயர் சொல்லி துதிக்க வேண்டும் என்ற மகாமந்திரத்தை வெளிப்படுத்துகின்றார். நமக்கு ஆண்டவர் கட்டளையிட்டது யாதெனில் நமக்கு முன் சாதனம் கருணை யானதினாலே ஆண்டவர் முதன் சாதனமாக,

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங் கருணை
அருட்பெருஞ்ஜோதி!!!

என்னும் திருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக்கொண்டார். தயவு, கருணை, அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும். ஆதலால் பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம். அது ஒப்பற்ற பெருந்தயவுடைய பேரறிவேயாம். இஃது வாச்சியார்த்தம். இவ்வண்ணம் சாதனம் முதிர்ந்தால் முடிவான இன்பானுபவம் பெறுவதற்குத் தடையில்லை என்பதை மகாமந்திரத்தின் தன்மையை வெளிப்படுத்துகின்றார்.

மேலே கண்ட மகாமந்திரத்தை மட்டுமே உபயோகப்படுத்த வேண்டும். இதுவே இறைவனின் உண்மையான மகாமந்திரம் என்பதை வெளிப்படையாக வெளிப்படுத்துகின்றார்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என் உடம்பில் கலந்து கொள்வதற்காக நான் இருக்கும் இடத்தில் வந்து அமர்ந்து இருக்கிறார் என்ற நிகழ்காலத்தை வெளிப்படுத்துகின்றார். மிகவும் முக்கியமான பாடல் நான்கு!

**சச்சி தானந்தத் தனிமுதல் அமுதே**
**மெய்ச் சிதாகாசவிளை அருளமுதே (1278)**

சத்திய அறிவிப்பு:

ஐயன் அருள் வருகின்ற தருணம் இது கண்டீர்
ஐயமிலலை ஐயமிலை ஐயன்அடி ஆணை
மெய்யன்எனை ஆட்கொண்ட வித்தகன்சிற் சபையில்
விளங்குகின்ற சித்தன்எலாம் வல்லஒரு விமலன்
துய்யன்அருட் பெருஞ்சோதி துரியநட நாதன்
சுகஅமுதன் என்னுடயை துரைஅமர்ந்திங் கிருக்க
வையமிசைத் திருக்கோயில் அலங்கரிமின் விரைந்தே
மணியாலும் பொன்னாலும் மலராலும் வியந்தே.

தனித்தலைமைப் பெரும்பதிஎன் தந்தைவரு கின்ற
தருணம்இது சத்தியம்காண் சகதலத்தீர் கேண்மின்
இனித்தநறுங் கனிபோன்றே என்னுளம்தித் திக்க
இன்னமுதம் அளித்தென்னை ஏழுலகும் போற்ற
மனித்தஉடம் பிதைஅழியா வாய்மைஉடம் பாக்கி
மன்னியசித் தெல்லாம்செய் வல்லபமும் கொடுத்தே
கனித்தசிவா னந்தமெனும் பெரும்போகம் தனிலே
களித்திடவைத் திடுகின்ற காலையும்இங் கிதுவே

சத்தியவான் வார்த்தைஇது தான்உரைத்தேன் கண்டாய்
சந்தேகம் இலைஇதனில் சந்தோடம் உறுவாய்
இத்தினமே அருட்சோதி எய்துகின்ற தினமாம்
இனிவரும்அத் தினங்கள்எலாம் இன்பம்உறு தினங்கள்
சுத்தசிவ சன்மார்க்கம் துலங்கும்எலா உலகும்
தூய்மைஉறும் நீஉரைத்த சொல்அனைத்தும் பலிக்கும்
செத்தவர்கள் எழுந்துலகில் திரிந்துமகிழ்ந் திருப்பார்
திருவருட்செங் கோல்எங்கும் செல்லுகின்ற தாமே!

என்சாமி எனதுதுரை என்உயிர்நா யகனார்
இன்றுவந்து நான்இருக்கும் இடத்தில்அமர் கின்றார்
பின்சாரும் இரண்டரைநா ழிகைக்குள்ளே எனது
பேருடம்பில் கலந்துளத்தே பிரியாமல் இருப்பார்
தன்சாதி உடையபெருந் தவத்தாலே நான்தான்
சாற்றுகின்றேன் அறிந்திதுதான் சத்தியம்சத் தியமே
மின்சாரும் இடைமடவாய் என்மொழிநின் தனக்கே
வெளியாகும் இரண்டரைநா ழிகைகடந்த போதே!

மேலே கண்ட பாடலின்படி இறுதியாக வெளிப்படுத்து-கின்றார்.

30.01.1874ஆம் நாள் ஸ்ரீமுக வருடம் தைமாதம் 19ம் நாள் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தார்களுக்கு வெளியிட்ட இறுதிக் கட்டளை! நான் உள்ளே பத்துப் பதினைந்து தினம் இருக்கப் போகிறேன். பார்த்து அவநம்பிக்கை அடையாதீர்கள். ஒருகால் பார்க்க நேர்ந்து பார்த்தால் யாருக்கும் தோன்றாது வெறுவீடாகத்தான் இருக்கும்படி ஆண்டவர் செய்விப்பார். என்னைக் காட்டிக் கொடுக்கமாட்டார் என்னும் திருவாக்கைத் தெரிவித்துவிட்டு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் அமர்ந்து இருக்கும் இடத்தில் உள்ளே சென்று விடுகின்றார்.

இந்த நிகழ்ச்சியை ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் தெரிவித்துவிட்டு உள்ளே சென்று அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருடன் கலந்து கொள்கின்றார். இனி எல்லா உயிர்களிலும் கலந்து கொள்வேன் என்கிறார்.

வள்ளலார் பாடல்!


எல்லா உலகமும் என்வசம் ஆயின!
எல்லா உயிர்களும் என் உயிர் ஆயின!
எல்லா ஞானமும் என் ஞானம் ஆயின!
எல்லா வித்தையும் என் வித்தை ஆயின!
எல்லா போகமும் என்போகம் ஆயின!
எல்லா இன்பமும் என் இன்பம் ஆயின!
எல்லாம் வல்ல சிற்றம்பலத்து என்அப்பர்
எல்லாம் நல்கி என் உள்ளத்துள் ளாரே!!

என்னும் பாடலிலே இனி நான் எவ்வண்ணம் உள்ளேன். என்ன செய்யப் போகிறேன் என்பதை வள்ளலார் தெளிவாகத் தெரிவிக்கின்றார்.

இந்த நாள் தான் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருடன் வள்ளலார் கலந்து கொண்ட திருநாளாகும். இதுவே இந்த உலகின் ஒரு முக்கியமான சிறந்த நாளாகும்.

உலகிலே உண்மைக்கடவுளான அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர், முதன் முதலில் இவ்வுலகிற்கு வந்த இடம் தான், தமிழ்நாட்டின் கடலூர் மாவட்டத்தில் உள்ள வடலூருக்கு அடுத்த மேட்டுக்குப்பம் என்னும் சித்திவளாக திருமாளிகையாகும்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!
கொல்லா நெறியே உலகம் எல்லாம் ஓங்குக!



அன்புடன் ஆன்மநேயன்
**ஈரோடு கதிர்வேல்**
+91 9865939896

**ஆனந்த அமுதே அருள்ஒளி அமுதே**
**தானந்தம் இல்லாத தத்துவ அமுதே (1280)**

மாதம் ஒரு மூலிகை கீரையின் குறிப்புகள்

# பொன்னாங்கண்ணி கீரையின் மகத்துவங்கள்

கீரைகளின் ராஜா என்று அழைக்கப்படுவது பொன்னாங்கண்ணி கீரை.



அந்த அளவிற்கு மருத்துவ குணங்களைக் கொண்டது பொன்னாங்கண்ணி கீரை என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான். எனினும் அதில் உள்ள மருத்துவ குணங்கள் பலருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. பொன்னாங்கண்ணிக்கீரை பூமியில் இருந்து பொன்ன சத்தை உறிஞ்சி நீரான நிலையில் தன்னுள் பெற்று இருக்கிறது. அதேபோல் மஞ்சள் கரிசாலையும் பொன் சத்தை பெற்றிருக்கிறது.

பொன்னாங்கண்ணி ஓர் அற்புதமான உடற்தேற்றி. இன்றைக்கு தங்கபஸ்பம் என்பது உயர்வ சதி படைத்தவர்களுக்கு கூட எட்டாத ஒரு மருந்தாகிப்போனது. ஆனாலும் அந்த சத்து ஏழைகளும் பெறும் விதத்தில் பொன்னாங்கண்ணியில் பொதிந்திருப்பது வியக்கத்தக்க ஒன்றாகும். இந்தக் கீரை பெரும்பாலும் நீர்நிலைகளான குளம் குட்டை கரைகளிலும், வாய்க்கால் கரைகளிலும் இயற்கையாக வளர்ந்து கிடப்பதைக் காணலாம். பொன்னாங்கண்ணியில் சீமை பொன்னாங்கண்ணி, நாட்டு பொன்னாங்கண்ணி என இருவகை உண்டு.

இதில் சீமை பொன்னாங்கண்ணி பெரும்பாலும் அழகுக்கு வளர்க்கப்படுகிறது. மருத்துவ குணம் குறைவு. பச்சையாக கிடைக்கும் நாட்டு பொன்னாங்கண்ணிதான் பல அருங்குணங்கள் கொண்டது.

மருத்துவ குணங்கள் :

பொன்னாங்கண்ணி தூக்கத்தை தூண்டக்கூடியது. மத்திய நரம்பு மண்டலத்தை சீர்செய்து சாந்தப்படுத்தக் கூடியது. இதனால் பல்வேற நரம்பு நோய்கள் குணமாகிறது. ஞாபக சக்தியை தூண்டக்கூடியது. கண்களுக்கும், மூளைக்கும் குளிர்ச்சி தரவல்லது. தலைவலி, மயக்கத்தை தணிக்கக்கூடியது.

பொன்னாங்கண்ணி சாறு பாம்புக்கடி விஷத்தை முறிக்கும் தன்மை உடையது. ரத்த வாந்தியை நிறுத்தக்கூடியது. ஈரலை பலப்படுத்த வல்லது. மஞ்சள் காமாலைக்கு மருந்தாகக்கூடியது.

முடி வளர :

பொன்னாங்கண்ணிக் கீரையை சாப்பிட்டுவந்தாலும் எண்ணெயில் இட்டு நன்கு காய்ச்சி எடுத்து வைத்துக் கொண்டு தலைக்குத் தடவுவதாலும் தலைமுடி நன்கு செழுமையாக வளரும். மலட்டு தன்மையை நீக்கும் பொன்னாங்கண்ணி கீரையை உணவில் அடிக்கடி சேர்ப்பதால் கொனேரியா எனும் பால்வினை நோய் குணமாகும். ஆண்களின் மலட்டுத் தன்மையையும், இயலாமையையும் போக்க கூடிய அற்புதமான மருந்தாகும்.

சர்க்கரை நோயாளிகளுக்கு ஓர் சத்து நிறைந்த உணவாகி அவர்களின் சோர்வைப் போக்குவதோடு சர்க்கரை நோய்க்கும் ஓர் துணை மருந்து ஆகிறது. தலைவலி, தலைச்சுற்றலை தணிக்க வல்லது. குடலிறக்க நோய் ஆன ஹெர்னியா தணிவதற்குத் துணையானது. பொன்னாங்கண்ணி நெஞ்சு சளியைக் கரைக்கவல்லது. மார்பு இறுக்கத்தைப் போக்கும்.

நவநிலை தரும்ஓர் நல்ல தெள்ளமுதே
சிவநிலை தனிலை திரண்ட உள்ளமுதே (1282)

புற்றுநோயை தடுக்கும்:

ஆஸ்துமா போன்ற நுரையீரல் கோளாறுகளையும் அகற்ற வல்லது. பொன்னாங்கண்ணி நுண்கிருமிகளை அழிக்க வல்லது. பொன்னாங்கண்ணி புண்களை ஆற்றக் கூடியது. ரத்தத்தில் சேர்ந்த கழிவுகளை போக்கி புற்று நோய் வராமல் தடுக்க கூடியது.

பார்வையை அதிகரிக்கும்:

பொன்னாங்கண்ணியை தொடர்ந்து 27 நாட்களுக்கு சாப்பிட்டால் பகலிலும் நிலவை பார்க்கலாம் என்பது பழமொழி. அந்த அளவிற்கு கண் பார்வை மிக துல்லியமாக தெரிய உதவுகிறது. பொன்னாங்கண்ணியை உப்பு சேர்க்காமல் வேக வைத்து இளஞ்சூட்டோடு வெண்ணெய் சேர்த்து சாப்பிட்டு வர கண் பார்வை தெளிவு பெறும்.

கண் நோய்கள் விலகும்:

பொன்னாங்கண்ணி கீரையை நன்கு மைய அரைத்து அதை நீர் நிரப்பிய மண்பானை மீது வைத்திருந்து மறுநாள் காலையில் எடுத்து கண்களின் மேல் வைத்து சிறிது நேரம் கட்டி வைத்திருந்தால் கண் நோய்கள் குணமாகும்.

பொன்னாங்கண்ணிச் சாறு:

நல்லெண்ணெய், நெல்லிக்காய் சாறு, பசுவின் பால், கரிசலாங்கண்ணிச் சாறு இவை சம அளவு எடுத்து இதனோடு சிறிதளவு அதிமதுரத்தை பாலில் அரைத்து சேர்த்து காய்ச்சி மெழுகு பதத்தில் வந்ததும் வடிகட்டி தலைக்கு தேய்த்து தலைமுழுகி வர 96 வகையான கண் நோய்களும் தொலைந்து போகும்.

பொன்னாங்கண்ணி கீரையை வதக்கி உடன் மிளகு, உப்பு போதிய அளவு சேர்த்து கற்ப மருந்தாக ஒரு மண்டலம் உண்ண உடலுக்கு வனப்பு, பொன் நிறம், கண்களுக்குக் குளிர்ச்சி ஆகியன உண்டாகும். புகைச்சல், ஈரல் நோய்கள் போன்றவை குணமாகும்.

ஒருபிடி பொன்னாங்கண்ணி கீரையை காலையில் வெறும் வயிற்றில் மென்று தின்று விட்டு பசும்பால் அருந்தி வர உடல் குளிர்ச்சி பெற்று ஈரல் நோய்கள் இல்லாது போகும். கண் நோய்கள் நீங்கிப் பார்வையும் தெளிவு பெறும்.

சிறுநீர் எரிச்சல்:

எலுமிச்சம்பழ அளவு பொன்னாங்கண்ணியின் வேரை எடுத்து சுத்திகரித்து 2 லிட்டர் எருமைப் பால் விட்டு கலக்கி காய்ச்சி தயிராக உறைய வைத்து கடைந்தெடுத்த வெண்ணெயை 3 நாட்கள் காலையில் சாப்பிட்டு விட்டு மோரையும் குடித்துவர சிறுநீரில் ரத்தம் கலந்து போதல், சிறுநீர் எரிச்சல் ஆகியன குணமாகும்.

உடல் எடை:

பொன்னாங்கண்ணி கீரையுடன் மிளகும், உப்பும் சேர்த்து சாதத்துடன் சாப்பிட்டு வந்தால் உடல் எடை குறையும். துவரம் பருப்பு, நெய்யுடன் சேர்ந்து சாப்பிட்டால் உடல் எடை கூடும்.

உடல் சூடு:

பொன்னாங்கண்ணி இலைச்சாறு, நல்லெண்ணெய் தலா ஒரு லிட்டர் கலந்து அத்துடன் அதிமதுரம், கோசுடம், செங்கழுநீர்க் கிழங்கு, கருஞ்சீரகம் வகைக்கு 20 கிராம் எடுத்து பாலில் அரைத்துப் போட்டு சிறு தீயில் பதமாகக் காய்ச்சி வடிகட்டி 4 நாளுக்கு ஒரு முறை தலைக்குக் குளித்து வர உட்காய்ச்சல், உடல்சூடு. கைகால் உடல் எரிச்சல், மண்டைக் கொதிப்பு, கண் எரிச்சல், உடம்புவலி, வயிற்றுவலி குணமாகும்.

பலன்கள் கிடைக்க தொடர்ந்து உபயோகிக்க வேண்டும். ஒரு நாள், இரண்டு நாள் சாப்பிட்டுவிட்டு நிறுத்தினால் முழுப்பலன் கிடைக்காது. குறைந்தபட்சம் 12 மாதங்களாவது தொடர்ந்து சாப்பிட்டால் பலனை கண்கூடாக பார்க்கலாம்.



ஆன்மநேயன் **பொதிகைபிரியன்**
கள்ளக்குறிச்சி
கைபேசி : 97897 88198

**பொய்படாக் கருணை புண்ணிய அமுதே**
**கைபடாப் பெருசீர்க் கடவுள் வானமுதே (1284)**

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி



சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின்

# 12ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழா

ஆன்மநேய ஒருமைப்பாட்டுள்ளம் கொண்ட அன்பு சகோதர, சகோதரிகளுக்கு தீபம் அறக்கட்டளையின் பணிவான வந்தனங்கள் பல...

நிகழும் ஜோதிமயமான வள்ளலார் 196-ம் ஆண்டு ஆவணி மாதம் 22-ம் நாள் 08.09.2019 ஞாயிற்றுக்கிழமை, தீபம் அறக்கட்டளையின் 12-ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழா கீழ்காணும் நிகழ்வுகளின் அடிப்படையில் திருவருள் ஆணை பிறப்பித்தபடி நடைபெற உள்ளதால் சன்மார்க்க சான்றோர்களும், ஜீவகாருண்ய தயவாளர்களும், ஆன்மநேய உடன் பிறப்புகளும், வாரி வழங்கும் கொடை வள்ளல்களும் மற்றும் அனைவரையும் விண்ணும்-மண்ணும் ஈரேழு உலகை ஆளும் எல்லாம் வல்ல பரம்பொருள் திரு அருட்பிரகாச வள்ளல் பெருமான் மலரடி பாதம் பணிந்து வேண்டி அன்புடன் அழைக்கின்றோம். தீபம் அறக்கட்டளையின் சிறப்பு மிகுந்த 12ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழாவில் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் பூமாரி பொழிய, தேன்தமிழ் அருட்பாவால் செந்தமிழ் நாமணக்க அருளுரையாற்ற வருகை தரும் அருளாளர்கள், நீதியரசர்கள், சன்மார்க்க சொந்தங்கள், அரசு அதிகாரிகள், புவியரசர்கள், கவியரசர்கள், பூவரசரர்கள் மற்றும் நிதியரசர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கும் மாபெரும் விழாவில் ஆன்மநேய உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு செவிக்கு விருந்தோடும் மனதிற்கு நிறைவோடும் கண்டுகளிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாள் : **08.09.2019**
(ஞாயிற்றுக்கிழமை)

இடம் : **நித்ய தீப தருமச்சாலை வளாகம்**
எண். 7/8, புத்தேரிக்கரை தெரு, தண்டீஸ்வரம் கோவில் அருகில்
வேளச்சேரி, சென்னை - 600 042.

**சிறப்பு விருந்தினர்கள்**

உலகப் புகழ்பெற்ற கிராமிய நாட்டுப்புற கலைகளின் பேரொளிச் சுடர்

கலைமாமணி **பத்மஸ்ரீ டாக்டர். விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன்** அவர்கள்,

கலைமாமணி **டாக்டர். நவநீதகிருஷ்ணன்** அவர்கள் மதுரை

சன்மார்க்க பேரொளிச் சுடர் **டாக்டர். ஜெய. ராஜமூர்த்தி** அய்யா அவர்கள் திருவெண்காடு

உயர்திரு **வாகை சந்திரசேகர்** அவர்கள் திரைப்பட நடிகர், வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர்

இவண் :

**நிறுவனர், அறங்காவலர்கள், நிர்வாகிகள்** மற்றும் **ஆடுகின்ற சேவடிகள்**
தீபம் அறக்கட்டளை & நித்ய தீப தருமச்சாலை, வேளச்சேரி, சென்னை - 600 042.

**தொடர்புக்கு : 94440 73635 / 97894 94009**

**அகம்புறம் அகப்புறம் ஆகிய புறப்புறம்**
**உகந்தநான்கு இடத்தும் ஓங்கிய அமுதே (1286)**

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

## நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| அதிகாலை 4.00 மணி | அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம் | ஜீவகாருண்யத் தயவுத்திரு **சைவமணி சௌந்தர்ராஜன்** அவர்கள் மற்றும் அருட்பெருஞ்சோதி அகல் விளக்கு மன்றத்தினர், நாகப்பட்டினம். |
| காலை 6.50 மணி | உலகு கட்டி ஆளும் சன்மார்க்க நீதிக்கொடி உயர்த்துதல் | தயவுதிரு **இராமமூர்த்தி** ஐயா அவர்கள், நாகப்பட்டினம் |
| காலை 7.00 மணி | இனிய காலை சிற்றுண்டி | தயவுமிகு **இராமையா** அவர்கள் திரௌபதி அம்மன் கோவில் வேளச்சேரி |
| காலை 8.00 மணி | சிறப்பு சொற்பொழிவுகள் தலைப்பு : ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல் | ஜீவகாருண்யத் தயவுத்திரு **சைவமணி சௌந்தர்ராஜன்** அவர்கள் |
| காலை 10.00 மணி | சிறப்பு சொற்பொழிவுகள் தலைப்பு : கொல்லாநெறியே குருவருள் நெறி | நாட்டுப்புற பாடல்களின் பேரொளி **பத்மஸ்ரீ டாக்டர். விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன்** அவர்கள், மற்றும் கலைமாமணி **டாக்டர். நவநீதகிருஷ்ணன்** மதுரை |
| காலை 11.00 மணி | சிறப்பு சொற்பொழிவுகள் தலைப்பு : தமிழ்மொழியும், சாகாக்கல்வியும் | சன்மார்க்க பேரொளிச் சுடர் **டாக்டர். ஜெய. ராஜமூர்த்தி** அய்யா அவர்கள் திருவெண்காடு |
| மதியம் 12.00 மணி | (திருவமுது) அன்னதர்மம் | தயவுதிரு **K. செல்வராஜ்** அவர்கள் தங்க நாராயணா சூப்பர் மார்கெட், வேளச்சேரி |
| மதியம் 12.30 மணி | திருஅருட்பா இன்னிசை | சன்மார்க்க இசைச்சுடர் தயவுதிரு **ஜீவ. சீனிவாசன்** குழுவினர் வடலூர் சேவை மையம், வடலூர் & திருக்கோவிலூர் |
| மதியம் 2.00 மணி | சிறப்பு சொற்பொழிவுகள் தலைப்பு : சுத்த சன்மார்க்கம் | நடமாடும் அருட்பா பல்கலைக்கழகம் ஈரோடு **கதிர்வேலனார்** அவர்கள் |
| பிற்பகல் 3.00 மணி | சிறப்பு சொற்பொழிவுகள் தலைப்பு : வள்ளலாரின் முத்தேக சித்தி | சன்மார்க்க சொல்லரசி தயவுமிகு **தேன்மொழி தமிழ்சோலை** அவர்கள், வேலூர் |

**பனிமுதல் நீக்கிய பரம்பர அமுதே**
**தனிமுதல் ஆய சிதம்பர அமுதே (1288)**

## மாதந்தோறும் முதல் சனிக்கிழமை "சன்மார்க்க சொற்பொழிவு"

20




சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலையில் மாதாந்திர சன்மார்க்க சொற்பொழிவில் சன்மார்க்க சங்கத்தின் வீரமங்கை தயவுமிகு **இராணி இராசதுரை** அவர்கள் "**ஜீவகாருண்யமே மெய்பொருள்**" என்ற தலைப்பில் 02.08.2019 அன்று உரையாற்றினார்

# அடுத்த மாத சன்மார்க்க சொற்பொழிவு

21

## நித்ய தீப தருமச்சாலையில்

## மாதந்தோறும் முதல் சனிக்கிழமை சத்சங்கம் (சொற்பொழிவு)



நாள் : 7.9.2019 (சனிக்கிழமை) / நேரம் : மாலை 6.00 மணி முதல்

தலைப்பு : **"உணவு ஒழுக்கம்"**

சொற்பொழிவாளர் : சன்மார்க்கத்தின் மூத்த சான்றோர்
தயவுமிகு **ஜோதி வேதாசலம்** அவர்கள்
செயல் தலைவர், திருஅருட்பிரகாச வள்ளலார் அருட்பணி
சத்சங்கம், திருவொற்றியூர்

இடம் : **நித்ய தீப தருமச்சாலை**
7/8, புத்தேரிக்கரைத் தெரு,
தண்டீஸ்வரம் கோவில் அருகில், வேளச்சேரி,
சென்னை – 600 042.
செல் : 9444073635 / 22442515 / 9789494009

**உலகெலாம் கொள்ளினும் உலப்பிலா அமுதே**
**அகிலாப் பெருந்திறல் அற்புத அமுதே (1290)**

# அருட்பெருஞ்சோதி அகவல்

அனுபவப் பொருள் விளக்கம்

திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா

## 39. உபய பக்கக் காட்சி

77. உபயபக் கங்களும் ஒன்றெனக் காட்டிய
78. அபயசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி.) பொதுவாகக் கண்ணாற் காண்பது காட்சி எனப்படும். மிக நுண் பொருளையும். அதி தொலைப்பொருளையும் காண, நுண்ணோக்கு ஆடி **(Microscope)** தொலைநோக்கு ஆடி **(Telescope)** உதவுகின்றன. உடலின் தசையுட் பொருளையும், உள் எலும்பின் வடிவங்களையும் காண மர்ம ஒளிக்கதிர் **(X-Ray)** பயன்படுகின்றது. இதுபோன்ற புறக் கருவிகளே அல்லாது, மனோ கற்பனையாலும், ஆழ்ந்த ஓர்மை எண்ணத்தாலும் பலவாகிய காட்சிகள் காணப்படுகின்றனவாம் ஆனால், இந்தக் காட்சிகள் எல்லாம் முழுமையானவை அல்லவாம். இக் காட்சிகள் குறைவுடையனவாயும், சிற்றெல்லையினதாயும், நிலையற்ற மாயா இயல்பினதாயும், இயற்கையுண்மையை உணர்த்தாதனவாயும் இருக்கின்றன. இதனால் இவைகளால் மனிதன் நிறை இன்பப் பயன் பெறக்கூடாதுபோம்.

மனிதனுக்கு மெய்யின்பானுபவம் வழங்குவது, ஜீவ, கரண, இந்திரியக் காட்சிகளுக்கு மேற்பட்ட ஆன்ம ஞான அருள் விளக்கத்தால் மட்டும் என்று அறியப்படும். அருள் ஞானமாகிய கண்ணைக் கொண்டு நோக்கும்போதுதான் ஒன்றன் அகம், புறம், முன், பின், ஆதி, அந்தம் முதலான இருநிலைத் தோற்றங்களும் உள்ளவாறு ஒரு படித்தாய் விளங்கும். அருளால் மறைப்பு நீங்கி விடுவதால் இரு பக்கத்து உண்மையும் மறைப்பற்றுக் காணலாகின்றது. மேலானநிலையுற்ற ஞானிக்கு முக்கால உண்மையும் விளங்குவது இதனால்தான்.

நமது அருட்பெருஞ்ஜோதி ஞான சபையில், திருவருளால் அடையப் பெற்று விளங்குகின்றவர்கள் எங்கும் என்றும் அருட்பேரொளியையே கண்டுகொண்டிருக்கின்றனர். இந்த உபயம் ஆகிய இரு பக்கக் காட்சியால் உளநிறைவெய்தி நிற்கின்றவர்களுக்குப் பயம் பூஜ்யம்தானே. இந்நிலையுற்றிருந்து கொண்டுதான் நம் வள்ளற்பெருந்தகை இந்த உபய பக்கங்களும் ஒன்றெனக் காட்டிய அபய சிற்சபையில் அருட்பெருஜோதி என்ற அகவல் அடிகளைப் பாடி மகிழ்கின்றார். இக் காட்சியனுபவத்தினால் உண்டான மகிழ்ச்சியில் மட்டும் பரவசப்பட்டு நின்று விடாது, முடிவில் நிறை இன்பானுபவத்தோடு நித்தமும் வாழும்பேறு பெற்றுக்கொண்டதை சபை எனது உளமெனத்தான் அமர்ந்தெனக்கே அபயமளித்ததோர் அருட்பெருஞ் ஜோதி என்று மேலும் போற்றியுள்ளார்.

மேற்படி அருட்பெருஞ்ஜோதியின் ஒன்றே ஒருவனுக்கு எவ்வகையிலும் மரணமில்லாப் பெருவாழ்வில் பேரன்பில் விளங்க வைப்பதாய் இருக்கின்றதால் இவ்வாழ்வு நிலையே முழுமையாகப் பயமற்றதாயுள்ளதாம். இவ்வபயநிலை உறாதவர்கள், அச்சம் இல்லை, அச்சம் இல்லை என்று சொல்லிக்கொண்டே வாழ்க்கைப் போரில் தோல்வியுற்று மடிந்து, அறிவனுபவம் இழந்து சூனியமாய்ப் போய்விடுகின்றார்கள். இதற்கு முற்றிலும் மாறானது நம் அருட்பெருஞ்ஜோதி அருள்கின்ற அபயநிலை.

**அண்டமும் அதன்மேல் அண்டமும் அவற்றுள
பண்டமும் காட்டிய பரம்பர மணியே (1292)**

# நித்ய தீப தருமச்சாலை கட்டிட நிதி

**கடந்த 12 - ஆண்டுகளாக, தினசரி நூற்றுக்கணக்கான
பசியால் வாடும் வறியவர்களுக்கு, பல்வேறு தருமச்சாலைகள் மூலம்
ஆயிரக்கணக்கானோருக்கு அன்னம்பாலிக்கும் அன்னதருமச்சாலை
கட்டிட அருட்பணிக்கு கருணை நிதியை வாரி வழங்குங்கள்**




**இந்த இடம் தீபம் அறக்கட்டளையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுவிட்டது. ஆனால் இந்த தயவு வெளிக்கும் நமக்கும் 60 லட்ச ரூபாய் இடைவெளி இருக்கிறது. இன்னும் 60 நாட்களில் அந்த இடைவெளி நீக்கப்பட வேண்டும் என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு சேர்த்து விட்டோம்! செயல்படுத்த விண்ணப்பிக்கிறோம்!**

**( அதன் பிறகு தான் அந்த பதிவு ஆவணங்கள் நமக்கு கிடைக்கும் )**

Donations may be sent by crossed cheque to:

**DEEPAM TRUST**

#30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

**For Bank Transfer**

| | | |
|---|---|---|
| Bank / Branch | : | State Bank of India / IIT Branch |
| Current A/c. No. | : | 30265475129 |
| IFSC | : | SBIN0001055 |

**வங்கி பரிமாற்ற தகவலை 9444073635 என்ற எண்ணிற்கு அவசியம் தெரிவிக்கவும்.**

**பிண்டமும் அதிலுறு பிண்டமும் அவற்றுள
பண்டமும் காட்டிய பராபர மணியே (1294)**

## சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 10-ஆம் ஆண்டு கல்வி உதவித்தொகை வழங்கும் விழாவில் 2ம் கட்டமாக உதவிபெறும் மாணவச்செல்வங்கள்
























**நினைத்தவை நினைத்தவை நினைத்தாங்கு எய்துற**
**அனைத்தையும் தரும்ஓர் அரும்பெறல் மணியே (1296)**

**சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் தொண்டர்கள் 70 வது மாத பூசத்திருநாளில் வடலூர் சத்திய தருமச்சாலையில் தொண்டாற்றும் அற்புத காட்சி**















**விண்பதம் அனைத்தும் மேற்பதம் முழுவதும்**
**கண்பெற நடத்தும் ககனமா மணியே (1298)**

# அறிந்தவை... மறந்தவை...

அறிவுடையோர், அறிவைப் பெருக்கிடும் ஆர்வமுடையோர், அறிவினான் ஆடுவது ஏன்? என, அறியாமையிலேயே ஆழ்ந்து இருப்போர், அறிந்ததை ஆய்வு செய்வோர், அறிந்தனவற்றை அழகுபட மிளிரச்செய்வோர், அறிந்தவைகளை அறவே மறந்துவிட்டவர் என பல தரப்பினர் ஒருமையுடன் வாழ்ந்திட முயன்று கொண்டிருக்கின்றோம்.

அறிதல், ஆய்தல், தெளிதல், உணர்தல், ஒன்றுதல் எனும் ஐந்து நிலைகள் கல்வி வழங்கலில் வற்புறுத்தப்படவேண்டும். கல்வி வழங்கலில், இருந்த, இருக்கின்ற, கவனக்குறைவாலும், கற்றவர்கள் கசடற கற்காததாலும், கற்றபின் அதன்வழி நிற்காததாலும் இன்று பிரதானமாக இருக்கிற தொழில்கள் இரண்டு.

இரத்தல் – செல்வம் குவித்தல். இந்த சுருக்கமான கூற்றினை விரிவுபடுத்தி விளங்கிக் கொள்ள விண்ணப்பித்து, நாம் மறந்தவைகளை நினைவுபடுத்திட விழைகிறேன்.

இரத்தல் எனின் ஆண்டி எடுக்கின்ற பிச்சை என்பதோடு நிறுத்தாமல், அரசோச்சுவோர் வரை அனைத்துத் துறையினரும், அனைத்து தரப்பினரும் எடுத்துக் கொண்டிருக்கிற பிச்சை பற்றி விரிவாக சிந்தியுங்கள்.

அபரிமித செல்வம் எப்படிக் குவிகிறது? ஏன் குவிக்கப்படுகிறது? என்பது பற்றியும் கொஞ்சம் யோசியுங்கள்.

கூடுவிட்டு இங்கு ஆவிதான் போயினபின், ஆரே அனுபவிப்பார் பாவிகாள் அந்தப் பணம். நாமெல்லாரும் அறிந்த சொற்றொடர்தானே. ஆனால் முழுமையாக மறந்துவிட்ட உயர்ந்த மனிதர்கள், இந்த பொல்லாத பணத்தை பன்மடங்கு பெருக்கிட எண்ணற்ற ஏமாற்று வித்தைகளை அரங்கேற்றி வருவதை பார்க்கிறோம். பாராட்டுகிறோம். பொன்னாடை போர்த்துகிறோம்.

நாம் அறிந்தவைகள் அநேகம். அறிவுறுத்தியவர்கள் எண்ணிலடங்கார். நமக்கு அறிவு புகட்டிட படைக்கப்பட்டவைகளை பட்டியலிடுதல் எளிதன்று.

மூவாயிரம் ஆண்டுகளாக வாழையடி வாழையாக வந்த வண்ணம் இருந்த உலக ஞானிகளும், அருளாளர்களும் வழங்கிய போதனைகள் அனைத்தையுமே, ஓதாது உணர்ந்தவர் ஒருவர் – ஓதி உணர்ந்தவர் ஒருவர். இருவருமே நமக்கு நன்கு அறிமுகமானவர்கள்தான். வள்ளலார் –1823 நம்மிடையே வாழ்கிறார். விவேகானந்தர் – 1863 இவருடைய எழுத்தும், பேச்சும் என்றும் உயிர்ப்புள்ளவை. இதில் வள்ளல் பெருமானார் வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினர் அல்ல

இவர்கள் எழுத்துக்களில் என்னுள் பதிந்தவைகளை – சிலதுளிகளை – இங்கு சமர்ப்பிக்கின்றேன். நீங்கள் அறிந்தவைகளாயினும் மறவாமலிருக்க நினைவூட்டல்தான் இம்முயற்சி. நமது வள்ளலார் படிக்காமலேயே படிப்பிக்கப்பட்டவர். இதை அவரே ஒரு பாடலில் தெளிவுபடுத்தியுள்ளார்.

நீ இயக்குகிறாய், நான் இயங்குகிறேன். நானா படித்தேன் படிப்பித்தாய் – படித்தேன்.

ஏன் வருவிக்கப்பட்டார்? ஏன் இயக்கப்பட்டார்?? அவரே சொல்கிறார்.

அகத்தே கறுத்து, புறத்தே வெளுத்திருந்த உலகர் அனைவரையும் சகத்தே திருத்தி, சன்மார்க்க சங்கத்து அடைவித்திட அவரும் இகத்தே, பரத்தை பெற்று மகிழ்ந்திருத்தகற்கென்றே யெனையிந்த யுகத்தே இறைவனால் வருவிக்க உற்றேன்.

எப்படி வாழ்ந்தார்?

கைகளை வீசி நடப்பதை நாணி
கைகளைக் கட்டியே நடந்தேன்
மெய்யுறக் காட்ட வெருவி வெண்துகிலால்
மெய்யெலாம் ஐயகோ மறைத்தேன்
வையமேல் பிறர்தம் கோலமும் நடையும்
வண்ணமும் அண்ணலே சிறிதும்
பையநான் ஊன்றிபார்த்ததே இல்லை
பார்ப்பனேல் பயமிகப் படைப்பேன்.

வள்ளலாரின் தனித்துவம் – சாகாக்கலை
சாகாமல் இருப்பது சத்தியம். எப்படி??

மடிந்தாலும் பொய்கூறேன், மானுடற்கே
நலிவுமில்லை சாவுமில்லை கேளீர், கேளீர்
நாணத்தை, கவலைதனை, சினத்தை, பொய்யை
அச்சத்தை, வேட்கைதனை அழித்துவிட்டால்
அப்போது சாவுமங்கே அழிந்துபோகும்
மிச்சத்தை பின்சொல்வேன் சினத்தைமுன்னே
வென்றிடுவீர், மேதினியில் மரணமில்லை.

அருட்பிரகாசரின், அமுதமொழிகளில் உரைநடையும் உண்டு. தெளிந்தாரின் வார்த்தை நம்மைத் தெளிவிக்கும்.

இறைவழிபாட்டின் போது, பிடில், மத்தளம், பிரம்மதாளம், நகார், கண்டாமணி, நாதஸ்வரம், முதலிய இசைக் கருவிகளைக் கொண்டு ஒலிகளை எழுப்பி பூஜைகள் செய்வது விரும்பத்தகாதது. இந்தவகை வழிபாட்டு முறை சன்மார்க்கத்திற்கு முற்றிலும் மாறானது.

மனநெகிழ்ச்சியோடு ஆண்டவனுடைய தோத்திரங்களை அமைதியாக, அன்போடு பாடுவதுதான் சன்மார்க்கத்தின் முக்ய இலட்சியத்திற்கு உடன்பாடானது.

தேங்காய் உடைப்பதைக்கூட வள்ளலார் ஏற்கவில்லை.

**பார்பதம் அனைத்தும் பகரடி முழுவதும்**
**சார்புற நடத்தும் சரவொளி மணியே (1300)**

தேங்காய் உடைக்க உங்களுக்கு விருப்பமிருந்தால், அதை முன்னதாகவே உடைத்துத் திருகி, அத்துடன் சர்க்கரை கற்கண்டு முதலியன கலந்து ஆண்டவருக்கு இனிப்பாக நைவேத்யம் வைப்பது நலம். ஆண்டவரை வாயார வாழ்த்துவது தவிர, அபிஷேகம், புஷ்ப அலங்காரம் – வாகனங்களில் ஏற்றி வீதி உலா வருதல் இன்னும் இது போன்ற ஆடம்பரங்கள் கூடாது.

கடவுளுக்குச் செலவு செய்ய வேண்டுமென்ற எண்ணமிருந்தால் அப்பணத்தை ஏழைகளின் வயிற்றுப் பெட்டியில் நிரப்புங்கள் (ஓதாது உணர்ந்த, வள்ளலாரின் உரைநடை)

ஓதி உணர்ந்த விவேகானந்தர் நமக்கு அளித்தவை வேத, வேதாந்தங்களையும் தர்ம சாஸ்திரங்களையும் கசடற கற்றுத் தேர்ந்தவர் என அறியப்பட்டவர் விவேகானந்தர். அவரை முழுமையாக அறிந்துகொள்ள, அவர் நிகழ்த்திய இரண்டு உரையாடல்களைத் தருகிறேன். அவருடைய வருகையும், ஆற்றிய பணிகளும் முழுதும் விளங்கும்.

பசு பாதுகாப்பு அமைப்பு ஒன்றின் பிரசாரகர்கள் தங்கள் அமைப்பிற்கு நிதி உதவி கோரி சுவாமி விவேகானந்தரை சந்தித்தனர்.

கோமாதா காப்பாற்றப்படவேண்டிய அவசியம் பற்றியும் தங்கள் அமைப்பு ஆற்றிடும் பணிகள் பற்றியும் விரிவாக விளக்கி, நிதி அளிக்குமாறு வேண்டினர்.

பொறுமையாக செவிமடுத்த சுவாமி, தற்காலம் மத்ய இந்தியாவிலே கடுமையான பஞ்சம் நிலவுகிறதே, ஒன்பது இலட்சம் மக்கள் மடிந்துபோனதாக அரசு அறிக்கை விடுகிறதே, உங்களுடைய அமைப்பு இந்த மக்களுக்கு உதவிட ஏதேனும் செய்துள்ளதா? என நாத்தழுதழுக்க, குரல் நடுக்கத்துடன் வினவினார். இல்லை. எங்கள் அமைப்பு கோ மாதாக்களை பாதுகாக்க – பராமரிக்க மட்டும்தான். மக்கள் மாள்வது அவரவர் கர்மவினையால் தான் என்பது தாங்கள் அறியாததா? என்று வினாவிற்கு வினாவை விடையாக்கினார் பிரசாரகர்.

சுவாமி அமைதியாக, ஆனால் உறுதியான குரலில் சொன்னார். மனிதனைப் பற்றி அக்கறையில்லாத எந்த அமைப்பின் மீதும் எனக்கு சிறிதளவும் அனுதாபம் இல்லை. பட்டினியால் மடியும் சகோதரனுக்கு உதவாமல் விலங்குகளையும், பறவைகளையும் பராமரித்தல். சமுதாயத்திற்கு நன்மை கிடைத்திடுமா, கர்மவினைதான் உலகத்தின் இன்னல்கட்கு காரணம் என்று ஏற்றுக்கொண்டால், உங்கள் பசுவதை தடுப்பு இயக்கம் அர்த்தமற்றதாகிவிடுமே? கோமாதாக்கள் கூட அவைகளின் கர்மவினையால் கொல்லப்படுகின்றன என்று வாதிட்டு நாமென்ன செய்யமுடியும் என்று வேடிக்கை பார்க்கலாமே! சுவாமி, தாங்கள் சொல்வது உண்மையானால், நமது சாஸ்திரங்கள் பசு நமக்கு மாதா என்றல்லவா சொல்கின்றன.

நான் படித்த சாஸ்திரங்களில், மனிதனுக்குத் தேவையான உணவு, கல்வி, பக்திக்குத்தான் முதலிடம். ஆகவே, என்னிடம் பணம் வந்தால், அதை முதலில் மனிதனுக்காக செலவிட்ட பிறகு ஏதேனும் மீதமிருந்தால் உங்களைப்பற்றி யோசிப்பேன்.

இவர்தான் விவேகாநந்தர்!
மற்றுமோர் உரையாடல் –

ஓர் இளைஞர், சுவாமிகளை சந்தித்து, தான் மதநூல்கள் பலவற்றை படித்துள்ளதாகவும், மதகுருக்கள் பலருடன் விவாதித்து இருப்பதாகவும் தன்னை அறிமுகப்படுத்திக்-கொண்டார்.

இவ்வளவு நூல்கள் படித்தும் – ஆன்றோர்கள் அறிவுரைகளைக் கேட்டும், சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்தும், கதவைத் தாளிட்டுக் கொண்டு நெடுநேரம் தியானத்தில் அமர்ந்தும், நான் விரும்பும் மன அமைதி எனக்குக் கிடைக்கவே இல்லை சுவாமி? காரணம் தெரியவில்லையே?

சுவாமியின் மறுமொழி – குழந்தாய், நீ முயற்சித்த காரியங்களுக்கு நேர் எதிரானவைகளை நீ செய்யவேண்டும். கதவை மூடாதே – கதவை நன்றாக திறந்துவை. சுற்று முற்றும் உற்றுப்பார். உதவியின்றி – உதவிகோரி எத்தனை பேர் தவிக்கிறார்கள் என்று கண்களை அகலத்திறந்து பார்வையை செலுத்து. அவர்களுடைய தேவைகளைத் தெரிந்து கொண்டு உன்னால் எந்தெந்த உதவிகளை எவ்வளவு செய்யமுடியுமோ செய்து கொண்டேயிரு. நீ விரும்பும் மன அமைதி உன்னைத் தேடி வந்து ஒட்டிக் கொள்ளும். கூடுதலாக உனது உள்ளத்தில் உற்சாகம் கொப்பளிக்கும்.

விவேகானந்தரின் விருப்பத்தை தானே தீபம் அறக்கட்டளை செய்துகொண்டிருக்கிறது. தீபத்தோடு இணைந்துள்ளேன் என்பதே எனது உற்சாகத்திற்கு உரம். எளிதினும் எளிதான, பின்பற்ற வேண்டிய எளிய சூத்திரம்

மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்கவேண்டா,
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டா,
மனமது செம்மையானால் வாசியை நிறுத்தவேண்டா.
மனமது செம்மையானால் மந்திரம் செம்மையாமே!

எளிது என்று சொல்கிறீர்கள்? மனதை செம்மைப்படுத்துவது எப்படி? அன்பர்களே! ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்யுங்கள்! இது எளிதல்லவா மறவாதீர். மனதில் இருத்துங்கள்.



**இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை
08056438488

**அண்டகோடிகள் எலாம் அரைக்கணத்து ஏகிக்
கண்டுகொண்டிட ஒளிர் கலைநிறை மணியே (1302)**

# சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலையிலும், வடலூர் சத்திய தருமச்சாலையிலும் தொண்டாற்றும் மனிதநேய மாணிக்கங்கள்...







RNI : TNTAM / 2010 / 35284 "REGISTERED" LICENSED TO POST WITHOUT PREPAYMENT UNDER WPP NO. TN/PMG/(CCR) / WPP-290/2017-2019 R.No.TN/CC(S)Dn/412/17-19

Posted at Patrika Channel, Egmore, Chennai - 600 008. | Date of Publication : 20th of Every Month.

**Published by :** M. Balakrishnan on behalf of Deepam Trust, #30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042 and **Printed by :** RK. Shekaar at Sree Offset Printer, No. 840, Anna Salai, Saidapet, Chennai - 600 015. **Editor : M. Balakrishnan**

தருமம் செய்வோம்!



## நடமாடும் அன்ன தருமச்சாலை

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் நடமாடும் அன்ன தருமச்சாலை மூலமாக வேளச்சேரி பகுதியில் தினசரி நூற்றுக்கணக்கான வறியவர்களின் பசிப்பிணியை போக்கும் அற்புதகாட்சி.

## வடலூர் சத்திய தருமச்சாலை சேவை

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் தன்னார்வ தொண்டர்கள் வடலூர் சத்திய தருமச்சாலையில் 70வது மாதங்களாக தொடர்ந்து சேவை...



If undelivered Please Return to:

**DEEPAM TRUST**
(REGD. No. - 2035/07)
#30, Droupathi Amman Koil Street,
(Next to Mosque), Velachery, Chennai - 600 042.
Phone : 044 - 2244 2515 | Cell : +91 94440 73635
E-mail : admin@deepamtrust.org
Web : www.deepamtrust.org

To
Shri. / Smt. / Dr.

Posted at Patrika Channel
Posted on 26-08-2019
Egmore, Chennai - 8